REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

[மலர் 4] சென்னை: மாசி 14உ திங்கள் (25—2—57) ★ ★ வெளியூர்: மாசி 15உ செவ்வாய் (26—2—57) [இதழ் 222

'அகில இந்தியா'க்களின் 'ஆல் இந்தியா'!

"வடக்கு—தெற்கு என்பதற்குப் பொருள் இல்லையென்றால், இந்தியாவுக்கு 'இந்தியா' என்று போடாமல், 'ஆல் இந்தியா' (அகில இந்தியா) என்று போட்டதற்குக் காரணம் என்ன?

"வானொலி இருக்கிறதே—அது 'அகில இந்திய ரேடியோ'—என்ன பொருள் அதற்கு?

எல்லா இந்தியாவும் சேர்ந்த வானொலி! என்ன

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரஸ் ஆட்சியில் நீதி வறண்டது ஏன்?

சங்கரலிங்கனாரைச் சாகடித்தபோதே காமராசரை தட்டிக் கேட்டிருந்தால்..?

உத்தமர்களுக்கு இனியும் அங்கென்ன வேலை?

காங்கிரசாருக்கு அண்ணா அறைகூவல்

"காட்டில் தன்னிச்சையாகத் திரிகிற சிங்கமும், சர்க்கஸ்காரனிடத்தில் கூண்டில் அடைக்கப்பட்டிருக்கிற சிங்கமும் பார்வைக்கு ஒன்றாகத்தான் இருக்கும். ஆனால், காட்டுச் சிங்கத்திற்கு இருக்கும் கம்பீரம், கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் சிங்கத்திற்கு இருக்காது. அதுபோலத்தான் காங்கிரஸ், இன்று, சர்க்கஸ்காரன் கையில் சிக்கி, கூண்டில் அடைக்கப்பட்ட சிங்கத்தைப்போல் இருக்கிறது. கூண்டில் அடைக்கப்பட்ட சர்க்கஸ் சிங்கத்தை, சர்க்கஸ்காரன் ஆட்டிப் படைப்பதுபோல், இன்று காங்கிரசை, டாடாவும் பிர்லாவும், குன்னியூராரும் வடபாதி மங்கலங்களும், டி. டி. கே. -யும் வட்டிக் கடைக்காரர்களும், ஊரார் சோத்தைத் திருடுபவர்களும், ஊரார் சோத்தைத் தின்று பிழைப்பவர்களும் ஆட்டிப் படைக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களிடம் காங்கிரஸ் சிக்கிவிட்ட பிறகு, அதற்காக உண்மை ஊழியம் செய்தவர்களுக்கும் தியாகம் பல செய்தவர்களுக்கும் இனிமேலும் அங்கு என்ன வேலை? இதை முதலில் உணர்ந்துகொள்ளுமாறு காங்கிரஸ்காரர்களை கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பிறகு தி. மு. க. அபேட்சகர்களுக்கு ஓட்டுப் போடுவதா, வேண்டாமா என்று தீர்மானித்துக்கொள்ளுங்கள்."

—இவ்வாறு, கடந்த 23-ந் தேதியன்று சென்னை யானைகவுனிக் கருகில், தோழர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

★

கொள்கையற்றுப் போனபின்!

தொடர்ந்து அண்ணா அவர்கள் பேசியதாவது:—

"காங்கிரஸ் இன்று கொள்கையற்றுப்போனபின், அங்கே கொள்ளையடித்தவர்களும் கொலை செய்தவர்களும் கூடாரம் அடித்தபின், தடியடிபட்டவன் ஏன் அங்கு இருக்கவேண்டும்? கொள்கைக்காகச் சிறைச்சாலையில் தள்ளிப் பூட்டப்பட்டவன் ஏன் இருக்கவேண்டும்? என்ன நோக்கத்திற்காக—எதை எதிர்பார்த்து அங்கு இருக்கவேண்டும்?

"டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் நல்ல அறிவாளிதான்; நல்ல செல்வந்தர்; அவருடைய அறிவையோ அவருடைய தனிப்பட்ட குணத்தையோ பற்றி நாங்கள் குறைகூறவில்லை. ஆனால் அவர் எப்போது காங்கிரசுக்கு வந்தார்? எப்படி காங்கிரசில் நுழைந்தார்? அவருக்கு எந்த முறையில் நீங்கள் 'ஜே' போடுகிறீர்கள்? அவர் தவறு செய்தபோதெல்லாம் ஏன் அவரைக் கண்டிக்க உங்களுக்குத் திராணியில்லை? அவர் பலவித சாமான்களுக்கு 'சோல் ஏஜெண்டாக' இருந்தாரே அப்போதுதான் காந்தியார் உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தார்; பகத்சிங் தூக்கு மேடையிலேற்றப்பட்டுத் தொங்கினார்; வ. உ. சிதம்பரம் சிறையிலே தள்ளப்பட்டு செக்கிழுத்தார்; திருப்பூர் குமரன் போலீசாரின் தடியடிக்கு ஆளாகி உயிரைத் துறந்தார். அந்த நேரத்திலெல்லாம் இவர் என்ன செய்துகொண்டிருந்தார்? தனது வியாபாரத்திற்கான வரவு-செலவுகளைக் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தார். கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்ட ஒரு கந்தசாமி காயம்பட்ட நேரத்தில், இவர் இலாபக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் வெள்ளைக்காரக் கம்பெனிக்கு ஏஜெண்டாக இருந்தவருக்கு நாட்டை ஆளும் வாய்ப்பு ஏற்பட்டால் உண்மை தியாகிகளுக்கு மட்டும் ஏன் கூடாது?

காந்தியார் என்ன நினைப்பார்?

"அவர் மந்திரியாக வந்த பிறகு எப்போதாவது ஒருமுறை காந்தியார் படத்தைப் பார்க்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது இவரைப் பார்த்து காந்தியார் என்ன நினைத்துக்கொண்டிருப்பார் என்று கற்பனை செய்து பாருங்கள்—'நான் என் வக்கீல் தொழிலையும் விட்டு எவ்வளவோ கஷ்டப்பட்டு வளர்த்தேன், இந்தக் காங்கிரசை! இப்போது இந்த கிருஷ்ணமாச்சாரி தட்டிப் பறித்துக்கொண்டாரே; இவரல்லவா சரியான ஆள்?' என்றுதான் நினைத்துக்கொள்வார்.

வெளியேறியிருந்தால்?

"இப்படிக் காங்கிரசின் பேரால் வட்டிக் கடைக்காரர்களும் கொள்ளை இலாபக்காரர்களும் இருப்பதைப் பார்த்ததும், 'இவர்கள் எல்லாம் இங்கே இருப்பதால் காங்கிரசுக்கு ஓட்டுப் போடமாட்டோம்,' என்று சொல்லி ஒரு பத்துப் பேர் காங்கிரசைவிட்டு வெளியேறியிருந்தால் இன்று காங்கிரசின் பேரால் முத்தையா செட்டியார் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பாரா?

ஏன் கண்ணீர் வரவில்லை?

"அண்மையிலே சங்கரலிங்கனார் செத்தாரே—ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்திருப்பார்களா காங்கிரசார்? அந்த சங்கரலிங்கனார் யார்? காமராசர் சிறுவனாக இருந்தபோது அவரது கையிலே கதர்க் கொடியைக் கொடுத்து, 'இப்படி சாய்த்துப் பிடி' என்று கற்றுக்கொடுத்தவர். 'ஜே' என்று சொல்வதற்குச் 'சுருதி' சொல்லிக் கொடுத்தவர்!

துணிந்து கேட்டிருந்தால்

"அப்படிப்பட்ட ஒரு பழம் பெரும் காங்கிரஸ்காரர் வெட்ட வெளியிலே கொட்டகைபோட்டு, கொட்டும் பனியிலும் குளிரிலும் அமர்ந்து 60, 70 நாட்களாக உண்ணாவிரமிருந்து செத்தாரே! எந்தக் காங்கிரஸ்காரர் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வழிந்தது? அந்த நேரத்தில் யாராவது ஒரு காங்கிரஸ்காரர் துணிந்து காமராசரை ஒரு வார்த்தை கேட்டிருந்தால் காமராசர் ஓடோடி இருக்கமாட்டாரா? மாநிலத்தின் முதலமைச்சர் என்ற பெருமைக்குரியவர், தமிழன் — அதுவும் 'பச்சைத் தமிழன்' என்ற சிறப்புப் பெயருக்குரியவர் 'ஏன்?' என்றாவது கேட்டாரா? 'உண்ணாவிரதத்தைக் கைவிடு' என்று சொன்னாரா? அதுகூட வேண்டாம்; 'என்ன உம்முடைய கோரிக்கைகள்?' என்றாவது அன்போடு ஒருமுறை கேட்டிருப்பாரா?

எதற்காக இறந்தார்?

"சங்கரலிங்கனார் எதற்காக இறந்தார்? அமெரிக்காவிற்குத் தான் முதல் மந்திரியாக வேண்டும் என்பதற்காகவா? அல்லது, 'ஒரிசா கவர்னராக இருந்த குமாரசாமி ராஜா விலகிவிட்டார்; எனவே நான் அடுத்த கவர்னராக வரவேண்டும்' என்பதற்காகவா? தமிழர் வாழ-தமிழ்நாடு வாழ, தமிழ் மொழி வாழ உண்ணாவிரதமிருந்தார். தமிழ்நாடு வாழ வேண்டுமென்பதில் யாருக்கு நஷ்டம்? இதில் யாருக்கும் நஷ்டமில்லையென்றால் ஏன் காமராசர் அவரை போய்ப் பார்த்திருக்கக்கூடாது?

பரிதாப நிலைமைதான்!

"இந்த நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க சென்னை சர்க்காரால் முடியும். அதற்கு டில்லி தேவையில்லை. அதைச் செய்யவில்லை காமராசர்; ஆனால் 'தமிழ் நாடு' என்றால் உலகத்திற்குத் தெரியாது என்று சொல்லும் பரிதாப நிலையை நாம் காண்கிறோம். இதை யார் கண்டித்தார்கள்? காங்கிரஸ்காரர்கள் கண்டித்திருப்பார்களானால் ஒருவேளை காமராசர் திருந்தியிருக்கக் கூடுமே?

பட்டிக்காட்டு பெரியவரும் பட்டணத்து காமராசரும்

"பட்டிக்காட்டில் அலங்கோலமான உடையுடன் ஒருவன் கையிலே கயிறு எடுத்துக்கொண்டு, ஊருக்கு ஒரு பக்கத்திலுள்ள புளியமரத்தின் பக்கம் செல்கிறான் என்றால், அவனைப் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? 'ஆள் அலங்கோலமாகக் காணப்படுகிறான்; கையிலே கயிறும் இருக்கிறது; புளியமரம் பக்கமாகப் போகிறான்; என்னவோ தெரியவில்லை' என்று நினைத்துக்கொண்டு அவன் பின்னால் போவார்கள். அப்படி முன்னே போனவன் புளியமரத்தில் தூக்குப்போட்டால், அவனைத் தடுத்து நிறுத்தி ஏன் என்று கேட்பார்கள். 'என்னைக் காப்பாற்ற யாரும் இல்லை; வாழ வழியில்லை; எனவே சாகிறேன்' என்று சொன்னால் அவர்கள் என்ன செய்வார்கள்? பக்கத்தில் நிற்கும் யாராவது ஒரு பெரியவர் 'இதற்காக நீ சாகவேண்டாம்; நான்கு வீடுகளிலும் பிச்சையெடுத்தாவது உனக்குச் சாப்பாடு தருகிறேன்; நீ வா' என்று தான் சொல்வார் பட்டிக்காட்டுப் பெரியவர்!

ஈவிரக்கமில்லையா? நீதி வறண்டு விட்டதா?

"ஆனால் நாட்டிலோ 'நான் சாகிறேன்' என்று பகிரங்கமாக அறிவித்தார் சங்கரலிங்கனார். ஏனென்று கேட்க மனம்வரவில்லை, இந்த நாட்டின் முதலமைச்சர் காமராசருக்கு! அந்த அளவுக்கு நெஞ்சிலே ஈவிரக்கமற்ற காமராசர் தமிழரா? அதுவும் பச்சைத் தமிழரா? ஏன் உங்கள் மனதில் நீதி வறண்டுவிட்டது? செத்த பிறகாவது அவருக்கு மரியாதை காட்டினாரா காமராசர்?

"மதுரையில் ஒரு தடவை பத்திரிகை நிருபர்கள் அவரைச் சந்தித்து 'சங்கரலிங்கனார் செத்துவிட்டாராமே' என்றார்களாம்; 'ஆம்; பத்திரிகையில் பார்த்தேன்' என்று பதிலளித்தாராம் காமராசர். 'ஏன் செத்தார்?' என்று மறுபடியும் அந்த நிருபர்கள் கேட்டபோது இரத்தினச் சுருக்கமாகப் பதில் கூறினாராம் —'பட்டினிகிடந்தார்; எனவே செத்துப்போனார்' என்று!

"இப்படி சுருக்கமாகப் பேசி சங்கரலிங்கனாரின் உயிரை வாங்கியிருக்கிறார்கள் காமராசரும் மற்றக் காங்கிரஸ்காரர்களும். அப்படிப்பட்ட காங்கிரசில் நாணயமுள்ள காங்கிரசாருக்கு என்ன வேலை?

தாலி இழந்த தாய்மார்!

"கடந்த சனவரி மாதத்தில் இந்தியக் குடியரசு தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாடினார்கள். அன்று, பொள்ளாச்சியை அடுத்த வால்பாறை தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் கூலி உயர்வுகோரி ஊர்வலம் வந்தார்கள். அப்போது கலவரம் ஏற்பட்டதால் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 5 பேர் கொலை செய்யப்பட்டார்கள் — துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானவர்களின் மனைவிமார் தங்கள் தாலிகளை அறுத்தனர். நாம், இப்போது 'போஸ்டர்'கள் போட்டிருக்கிறோம். ஆனால் அந்தப் 'போஸ்டர்'களைப் பார்த்து, 'அடுக்கு மொழியில் எழுதியிருக்கிறார்கள்' என்று கூறுகிறார்கள். அவர்களுக்கு அதில் காணப்படும் அடுக்கு மொழிதான் குத்துகிறதே தவிர, இந்த ஆட்சியினால் அவர்களெல்லாம் தாலி இழக்க நேரிட்டதை நினைத்துக் கண்டித்திருப்பார்களா?

வெளியே வாருங்கள்!

"எனவேதான், இம்முறை, கட்சியையும் மீறி, உண்மையை நாட்டில் நிலைநாட்ட நல்ல காங்கிரஸ்காரர்கள் காங்கிரசை விட்டு வெளியே வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி வந்தால்தான் இனிமேலாகிலும் நாட்டில் ஜனநாயகம் தழைக்க முடியும்.

காமராசர் தியாகியா?

"காங்கிரஸ் எப்படி வளர்ந்தது? காமராசர் போன்றவர்களின் 'தியாகத்'தினாலா? காமராசரை தியாகி என்று சொல்வீர்களானால், 'தியாகி' என்ற பதத்தின் பொருளை மறக்கிறீர்கள் என்று பொருள். தோழர் நடராசனை தியாகி என்றழைக்கலாம்; ஆனால் காமராசரைப் பார்த்து 'தியாகி' என்றால், 'தியாகி' என்றால் என்ன பொருள் என்பதை எனக்கு எடுத்துக் கூறுங்கள்!

தியாகம் என்றால் என்ன?

"'தியாகம்' என்பது இருந்ததை இழப்பது; அல்லது வர இருந்ததை வேண்டாம் என்பது. 6 இலட்சம் ரூபாய் கொடுத்து அத்தை மகளைக் கட்டிக்கொள்ள வற்புறுத்தியும் மறுத்த வாலிபன் 6 இலட்சம் ரூபாயை தியாகம் செய்கிறான் என்று பொருள். ஏன் இந்த உதாரணத்தைச் சொன்னேனென்றால், காங்கிரசுக்காரர்களுக்குக் கடினமான உதாரணம் சொன்னால் புரியாது என்பதற்காகத்தான்!

"தியாகம் என்பது அதுவானால், காமராசர் எதை இழந்துவிட்டார்? வர இருந்த எதை 'வேண்டாம்' என்றார்? அந்த வகையிலே ராஜாஜியை வேண்டுமானால்கூட தியாகி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 25—2—57 திங்கள்

தீர்ப்பு நாள் நெருங்குகிறது

மூன்றே நாட்கள்; நாலாம் நாள்—மார்ச் திங்கள் முதல் நாள், தமிழ்நாட்டில் பொதுத் தேர்தல்கள் துவங்குகின்றன; அன்று 32 சட்டசபைத் தொகுதிகளுக்கும் 8 மக்கள் சபைத் தொகுதிகளுக்கும் வாக்குப் பதிவு நடைபெறவிருக்கிறது.

இதுநாள்வரை எவருக்கு ஓட்டுத் தருவது என்ற சிந்தனையில் ஈடுபட்டு வந்திருக்கும் வாக்காளர் பெருமக்கள் முடிவெடுக்க வேண்டிய நாள்—தீர்ப்பு நாள் நெருங்கிவிட்டது!

தேர்தலில் கலந்துகொள்ளுகிற எல்லாக் கட்சியினரும், சுயேச்சை அபேட்சகர்களும், தங்கள் தங்களுக்குள்ள ஆற்றலுக்கும் வசதிக்கும் வாய்ப்புக்கும் ஒப்ப வாக்காளர்களை அணுகித் தங்கள்தேர்தல் நோக்கத்தை எடுத்துரைத்து வந்திருக்கிறார்கள். அனைவருடைய குரலையும் கூர்ந்து கேட்டுவரும் தமிழ்ப் பெருமக்கள் எழுதவிருக்கும் தீர்ப்பு, இந்த நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமானதோர் திருப்பத்தைச் சிருஷ்டிக்கப் போகிறது.

தீர்ப்பெழுதவிருக்கும் வாக்காளருக்கு, திராவிட முன்னேற்றக் கழகம் புதிதாகத் தேர்தலில் ஈடுபட்டுள்ள கட்சி என்ற உண்மை நன்றாகத் தெரிந்தே இருக்கிறது. ஆனால் இந்த நிலையையே தி. மு. கழகத்திற்குள்ள குணக்குறைவாக எடுத்தியம்பி, சிலர் அரசியல் இலாபம் தேட முயன்று வருவதையும் வாக்காளர் அறிந்து தான் இருக்கின்றனர்.

தேர்தல் நெருங்க நெருங்க, காங்கிரசாரும் இதர அகில இந்தியக் கட்சிகளும், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கும் 'பணி'யைத் தீவிரமாக்கி வருகின்றனர்.

காங்கிரசாரும் இதர கட்சியினரும், தி. மு. கழக எதிர்ப்பு அணியில் ஒன்று சேர்ந்து, கழகத்தைத் தூற்றுகிற வேலையில் ஈடுபட்டிருப்பது மட்டுமின்றி, ஆங்காங்கே கழகத்தின் பல துறைப் பிரச்சாரங்களைத் தடுத்துவிடவும் இழிவான முறைகளைக் கையாண்டு வருகின்றனர்.

கண்ணியத்தின் காவலர்கள் என்ற பெருமைக்குரிய பெயர் பெற்றுள்ள தி. மு. கழகத் தோழர்கள், எப்போதும்போல் இந்தத் தேர்தல் நேரத்திலும் கழகத்தின் நற்பெயர் காக்கத் தவறமாட்டார்கள்.

இன்று தேர்தலில் ஈடுபட்டுள்ள கட்சிகள் பலவும், தங்கள் தங்கள் வெற்றியைவிட தி. மு. கழகத்தின் தோல்விக்கு முக்கியத்துவம் தந்து, கழகத்தவரை தோல்வியடையச் செய்யக் கூட்டு முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர் பல தொகுதிகளில். இது இயற்கையாகவே கழகத் தோழர்களின் ஆர்வம் மேலும் பன்மடங்காகப் பெருகி பணிகளைத் துரிதப்படுத்தவும் நிவிரப்படுத்தவும் துணைபுரிவது கண்டு, அந்தக் கூட்டு முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நண்பர்களுக்கு நாம் நன்றி கூறிக்கொள்வோம். ஆனாலும் அது, அவர்களின் பலவீனத்தையே காட்டுகிறது என்பதை வாக்காளர்கள் உணர வேண்டுகிறோம்.

தேர்தல் ஜுரம், ஜன்னியாக வேகமாகிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ள கழக எதிர்ப்பாளர்கள், கழகத்தைப் பற்றி அவதூறுகளையும் பொய்யுரைகளையும் புனைந்துரைகளையும் அள்ளி வீசி, மக்களின் சிந்தனை தெளிவடையாமல் குழப்பிவிடக் கருதுகிறார்கள். அவர்களுக்காக நாம் பரிதாபப்படுகிறோம்.

கழகம் தேர்தல் பிரகடனம் வெளியிடும்வரைகூடப் பொறுத்திருக்க முடியாத சில இச்சை அடக்கமற்றவர்கள், அதனையே ஒரு குற்றச்சாட்டாக்கிவிடக் கருதித் தோல்விகண்டார்கள்.

பின், கழகத் தேர்தல் திட்டங்களையும் கொள்கைகளையும் விமர்சிக்கிறோம் என்ற பெயரில் தங்களுடைய அரசியல் ஞான சூனியத்தை வெளிச்சம் போட்டுக் காட்டினார்கள்.

பின்னர் கழகத்தைப் பற்றி மக்கள் கொண்டுள்ள திடமான கருத்தினைக் கலைத்துவிட, கழகத்தவர்மீது இல்லாததும் பொல்லாததுமான பொய்யுரைகளை—அவதூறுகளை மக்கள் முன் சிருஷ்டித்து வருகிறார்கள். அதற்கும் பின்னர், இந்த இத்தனை தந்திரங்களும் வாக்காளரை ஏமாற்ற முடியாது போய்விடுமோ என்ற அச்சத்தில், கடைசி ஆயுதமாகக் கழகத்தவரைத் தாக்க முற்பட்டிருக்கிறார்கள். தோல்வியின் ருசி அவர்களுக்குத் தட்டுகிறது போலும்!

தமிழ் மக்களுக்கு—தென்னாட்டு மக்களுக்கு இந்த 'அகில இந்தியா'க்கள் இழைத்து வந்துள்ள துரோகங்களின் பட்டியலைப் பார்த்தவர்கள், இவர்களில் எவருக்கும் வாக்களிக்க மனம் ஒப்பமாட்டார்கள்.

'ஏக இந்தியா' என்ற அரசியல் அமைப்பில் தென்னாட்டவர்கள்—தமிழர்கள் அடிமைகளாக்கப்பட்டு, விடுதலை, வாழ்வு, வளம் அத்தனையையும் பறிகொடுத்துப் பரிதவிக்கும் உண்மையை மூடிமறைக்கிற 'புண்ணிய சீலர்'களல்லவா இவர்கள்?

எல்லாம்வல்ல இறைவனைடெல்லி ஆக்கப்பட்டிருப்பதையும், அதன் விளைவாகத் தென்னாட்டு மக்கள், தங்கள் உரிமைகளை இழந்து நிற்பதையும் நியாயம் என்று கூறுகிற கண்ணியவான்களல்லவா இந்த 'அகில இந்தியா'க்கள்?

ஐந்தாண்டுத் திட்டங்களில், வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் தென்னாட்டவருக்கு இழைத்துவரும் மிகக் கொடிய அநீதிகளுக்கு நியாயம் கற்பிக்க முயலும் 'உத்தமர்'கள் அல்லவா இந்த 'ஏக இந்தியா'க்கள்?

'ஏக இந்தியா' என்ற பெயரால் இந்த நாட்டு மக்களின் செல்வமும் உழைப்பும் வடநாட்டவரால் சுரண்டப்படும் கொடுமைக்குப் பாதகாப்புத் தரும் டில்லி பக்தர்களல்லவா, இந்த 'அகில இந்தியா'க்கள்?

இல்லாத 'ஒற்றுமையை'ச் சிருஷ்டிக்க என்று கூறித் தங்கள் ஏகாதிபத்தியம் நிலைப்பதற்காக, வடநாட்டுப் பாசிச வெறியர்களின் இந்தித் திணிப்புக்கு ஒப்புதல் அளித்துள்ள நல்லவர்கள் அல்லவா, இந்த 'பரந்த மனம்' படைத்தவர்கள்?

சுருங்கக் கூறின், வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் தாசர்களாய் — பாதந்தாங்கிகளாய்—ஏஜெண்டுகளாய் இருந்து கொண்டு தமிழக மக்களை நிரந்தர அடிமைகளாக்கி விடத் துணிந்துவிட்ட 'குணவான்'கள்தான், இந்த 'அகில இந்தியா'க்கள். ஆட்டத்தில் எத்தனை தான் பறிகொடுத்தாலும் கிஞ்சிற்றும் கவலைப்படாத பெயர் போன சூதாடிகளைப்போலத் தான் இந்த 'அகில இந்தியா'க்களும் தமிழக மக்களின் உரிமைகள், வளம், வாழ்வு இவை எத்தனைதான் பறிபோனாலும் கவலைப்படாத 'சுத்த தேசபக்தர்'களாய் உள்ளனர்.

இவர்களது மாயாஜால மகேந்திர ஜாலங்களிலும், பித்தலாட்டப் பிரச்சாரங்களிலும், தமிழ் மக்கள்பால் அக்கரை கொண்டவர்கள்போல் நடிக்கும் டம்பங்களிலும் தமிழ்ப் பெருமக்கள் ஏமாந்துவிடமாட்டார்கள் என்பதை இவர்கள் உணரும் வண்ணம், மக்கள், தேர்தலில் தீர்ப்பு எழுதுவார்கள் என்றே திண்ணமாக நம்புகிறோம்.

கட்டுப்பாட்டை மீறிக் கிளம்பிவிட்ட குண்டு

அலாமா கோர்டா, பிப். 24—கட்டுப்பாட்டை மீறித் தானாகக் கிளம்பிச் சென்றுவிட்ட ஒரு 'பறக்கும் குண்டை'க் கண்டு பிடித்து அழிப்பதற்கு இரு 'ஜெட்' போர் விமானங்கள் அனுப்பப்பட்டுள்ளனவாம்!

தேர்தல் நெருங்கும்போது மக்கள்மீது அனுதாபமா?

காங்கிரசாரின் பத்தாண்டுக் கால ஆட்சிக் கேடுகள் பற்றி டி. கே. சீனிவாசன் விளக்கம்

21-2-57-ல், சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டையில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர் டி. கே. சீனிவாசன் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி முந்திய இதழில் வெளியிடப்பட்டுள்ளது; இறுதி பகுதி இங்கு தரப்படுகிறது:—

"காங்கிரஸ் முதலில் அரும் பெருந் தலைவர்களால்—தியாகிகளால் வளர்க்கப்பட்டது; ஆனால் இடையில் அவர்களெல்லாம் வெளியேறி சுயநலக்காரர்களால் வளர்க்கப்பட்டது; இப்போது கடைசியாக, 'காங்கிரசை ஒழித்துக் கட்டுவேன்' என்று யார் கூறினாரோ அதே பெரியார் வளர்க்கிறார். இப்படி காங்கிரஸ், வளர்க்கப்பட வேண்டியவர்களால் வளர்க்கப்படவில்லை; வளர்க்க ஆசைப்பட்டவர்களாலும் வளரவில்லை; ஆனால் ஒழித்துக் கட்டும் எண்ணங்கொண்டவரால் வளர்க்கப்படும் நிலை என்றால், இதைவிட அதற்கு வேறென்ன வீழ்ச்சி உண்டு?

"பொதுவாகத் தேர்தல் காலங்களில் ஆளும் கட்சியை ஆளாத கட்சிகள் குறைகூறும். ஆளும் கட்சி செய்யத் தவறியவைகளை எடுத்துக்கூறும்; அது செய்த அநியாயங்களை எடுத்துக்காட்டிக் கண்டிக்கும். ஆனால் நமது நாட்டிலோ, ஆளும் கட்சியும் மற்றக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குறை கூறுகின்றன. இதன் பொருள் என்ன? ஆளும் கட்சி சட்டசபைக்கு உள்ளே இருக்கும் காங்கிரஸ் கட்சி—எனவே எதிர்க்கட்சிகள் காங்கிரசைத் திட்டுகின்றன. அதுபோல சட்டசபைக்கு வெளியே ஆளும் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்; எனவே, காங்கிரசும் மற்றக் கட்சிகளும் திட்டுகின்றன—இதுதானே தவிர வேறென்னமல்ல!

"நேரு நம்மைப் பார்த்து, 'மத்திய காலக் கட்சி' என்று சொல்லியிருக்கிறார். இதே நேரு பண்டிதர் முன்னால் ஒரு முறை இங்கு வந்தபோது தி. மு. கழகத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, 'இது காட்டுமிராண்டிக் காலக் கட்சி' என்று சொன்னதை யாரும் மறந்திருக்கமாட்டீர்கள். இப்படி ஒருதடவை—முதல் தடவை நம்மை காட்டுமிராண்டி காலக் கட்சி என்றார்; இரண்டாவது தடவை மத்தியகாலக் கட்சி என்றார். இனி அடுத்து ஒருமுறை வந்தால் நிச்சயம் 'தி. மு. கழகம் ஒரு நவீன காலக் கட்சி' என்று தான் சொல்லப்போகிறார்.

"இன்றைய நிலையில் நம்மை எதிர்க்கும் முக்கியமான இரண்டு இயக்கங்கள் காங்கிரசும் கம்யூனிஸ்டும். காங்கிரஸ், 'நான்தான் ஆள வேண்டும்; எதிர்க்கட்சியே கூடாது' என்கிறது; இது முதல் தரமான சர்வாதிகாரம்! கம்யூனிஸ்டுகளோ 'காங்கிரஸ்தான் இந்த நாட்டை ஆளவேண்டும்; ஏனென்றால், எங்களால் ஆட்சி நடத்தமுடியாது; ஆனால் நாங்கள் மட்டுமேதான் எதிர்க்கட்சியாக இருப்போம்; வேறு யாருமே கூடாது,' என்கிறார்கள். இதுவொரு விசித்திரமான சர்வாதிகாரம்! ஆளும் யோக்கியதை தனக்குத்தான் இருக்கிறது என்று காங்கிரசும், எதிர்க் கட்சியாகத் தாங்கள்தான் இருப்போம்—வேறு யாரும் வரக்கூடாது என்று கம்யூனிஸ்டுகளும் சர்வாதிகாரப் பாதையில் சென்றுகொண்டிருக்கும்போது, இந்த விசித்திர அமைப்பின் இடையில் சிக்கிக் கொண்டிருக்கிறார் பெரியார் அவர்கள்! ஏனென்றால், பெரியார் ஜனநாயகத்தை நம்பாதவர்!

"சர்வாதிகாரியாக எவர் வந்தாலும் ஒன்றுதான். ஆனால் அப்படி சர்வாதிகாரியாக மாறக் கூடாது என்று கூறுவதுதான் ஜனநாயகம். ஜனநாயகத்திற்கு இதைத் தவிர வேறு பொருளே கிடையாது.

"காங்கிரஸ்காரர்களுடைய இன்றைய நிலை, 'நாங்கள் இன்னின்ன செய்தோம்' என்று சொல்ல முடியாதபடி இருக்கிறது. அவர்களிடத்தில் பட்டியல் கிடையாது; ஆனால் பெரியார் பட்டியல் போட்டுக் கொடுக்கிறாராம்—'2,000 பள்ளிகளைக் காமராசர் திறந்தார்'—என்று!

(3-ம் பக்கம் பார்க்க)

ஹங்கேரி சம்பவங்கள் தேசீய எழுச்சியின் விளைவே!

அன்னியர் தூண்டுதலால் மக்கள் எழவில்லை

ஐ. நா. தனிக் குழு கருத்து

நியூயார்க், பிப். 22—"ஹங்கேரி எழுச்சி எதிர்ப் புரட்சியுமல்ல; வெளியாரால் தூண்டப்பட்டதுமல்ல; ரஷ்யாவிற்கு எதிரானதுமல்ல" என்று, ஐ. நா. நியமித்த ஹங்கேரி விசாரணைத் தனிக் குழு தீர்ப்பு கூறியிருக்கிறது.

இந்தக் குழுவில் இலங்கை, டென்மார்க், டூனீஷியா, உராகுவே, ஆஸ்திரேலியா ஆகிய ஐந்து நாட்டுப் பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர்.

இந்தக் குழுவினர், ஐ. நா.-விடம் தந்துள்ள இடைக்கால அறிக்கை ஒன்றில், ஒருமனதாகத் தெரிவித்துள்ளதாவது:—

"கடந்த அக்டோபர் 24-ந் தேதிக்கும் நவம்பர் 4-ந் தேதிக்கும் இடையில் நடைபெற்ற சம்பவங்கள் எதிர்ப் புரட்சிக்கானவை அல்ல!

"உண்மையில் எழுச்சி, ரஷ்யாவிற்கு எதிரானதுமல்ல!

"வெளியார் தூண்டுதலாலும் எழுச்சி தோன்றவில்லை.

"எழுச்சி, முன்கூட்டியே எந்த இயக்கத்தாலுமோ தனி நபர்களாலுமோ திட்டமிடப்பட்டு தூண்டப்பட்டதல்ல; சகல பகுதி மக்களும் தம்மிச்சையாகவே எழுச்சியில் பங்கு பெற்றனர்.

"ஹங்கேரி இரகசியப் போலீசாரின் கடந்த கால நடவடிக்கைகளும், எழுச்சியின் போது அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுமே பெரும் உயிர்ச் சேதத்திற்குக் காரணமாகும்."

எதிரி விமானங்கள் ஆகாயத்திலேயே அழியும்!

வாஷிங்டன், பிப். 24—ஆகாயத்திலிருந்து குண்டு பொழியும் எதிரி விமானங்களை ஆகாயத்திலேயே அழிக்கக்கூடிய அணுசக்தி ராக்கெட் ஆயுதங்கள் அமெரிக்காவிலுள்ள முக்கிய இராணுவ விமானத் தளங்களுக்கு விநியோகிக்கப் பட்டிருக்கின்றனவாம். இந்த ராக்கெட்டுகளே, போர் விமானங்களே பிரயோகிக்கத் தக்கவையாம்!

சிங்கள வெறியர்கள் திருந்துகின்றனர்

கொழும்பு, பிப். 24—சிங்களம் பேசும் மக்கள் வசிக்கும் பகுதிகளில் தமிழர்களுக்குச் சொந்தமான கடைகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற உத்தேச இயக்கத்தைக் கைவிட்டுவிடுவதென, சிங்களம் பேசும் மக்கள் யூனியன் முடிவு செய்திருக்கிறதாம்.

சுமத்ரா விடுதலை எழுச்சியின் விளைவு

ஜகார்தா தலைவர்களின் சிந்தனைப் போக்கு மாறுகிறது

மேற்கத்திய ஜனநாயகம் இந்தோனேஷிய நாட்டிற்குப் பொருந்தவில்லையாம்!

சர்வ கட்சி ஆட்சி அமைக்க சுகர்ணோ யோசனை

ஜகார்தா, பிப். 21—சுமத்திரா மாநிலங்களில் எழுந்த விடுதலை எழுச்சி, ஜகார்தா அரசியல் தலைவர்களின் சிந்தனைகளிலும் போக்கிலும் விசித்திரமான மாறுதல்களைச் சிருஷ்டித்துள்ளது.

(3-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★

அடிமை விலங்கறுக்க
தாயகம் விடுதலை பெற

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே
ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

டி. கே. சீனிவாசன் சொற்பொழிவு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"2,000 பள்ளிகளைக் காமராசர் திறந்தாரென்றால் இங்குமட்டுமா? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பம்பாய், உத்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம், காஷ்மீர் மற்றும் எல்லா மாநிலங்களிலும்தான் பள்ளிகள் திறக்கப்பட்டன. இரண்டாவது திட்ட முடிவில் மத்திய பிரதேச மாநிலத்தில் மட்டும் 6,000 பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன; 6 முதல் 14 வயது வரை உள்ள மாணவர்களுக்கு இலவசப் படிப்புதான் தருகிறார்கள்; மேலும் அந்த மாநில சர்க்கார் கடந்த ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து 14 வயதுக்குட்பட்ட மாணவர்கள் அனைவரும் கண்டிப்பாகப் படித்தாக வேண்டும் என்று கட்டாயக் கல்வியையும் கொண்டுவந்தார்களே? இப்படி பீகார், பஞ்சாப், காஷ்மீர் ஆகியவைகளில் எல்லாம் ஆயிரக் கணக்கில் பள்ளிகளைத் திறந்திருக்கிறார்கள். இப்படி இந்தியா பூராவிலுமே அம்மாதிரி செய்யப்பட்டிருக்கும்போது, இங்குமட்டும் செய்திருப்பதானது எப்படி காமராசரைச் சாரும்?

"பள்ளிகளையும் மருத்துவமனைகளையும் கட்டினார்கள்; மறுக்கவில்லை. ஆனால், பசியால் எங்கும் மக்களுக்காக என்ன செய்தார்கள்?

"ஒவ்வொரு மாநில அரசும் அந்தந்த நாட்டு மக்களை நல்வளப்படுத்த அக்கரையும் கவலையும் கொண்டிருக்கின்றன. பீகார் சர்க்கார், தனது நாட்டைப்பற்றி குறிப்பிடும்போது, 'வறுமை மிக்க மக்களைக் கொண்ட வளம் பொருந்திய நாடு' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறது. 1951-ல், நில ஆராய்ச்சி நிபுணர்களை அழைத்து அந்நாட்டின் கனிச் செல்வத்தைக் கண்டறிய ஒரு பெரிய கமிட்டியையே உருவாக்கியது.

"மேற்கு வங்கம், தனது மாநிலத்தில் எண்ணெய் ஊற்றுக்களைக் கண்டுபிடிக்க மாதந்தோறும் ரூ. 3½ இலட்சம் ரூபாய் செலவழித்தது. ஆனால் இங்கோ, இப்போதுதான்—1957-ல்தான், 'இங்கே என்னென்ன கிடைக்கும் என்பதைக் கண்டுபிடிக்கத் திட்டமிட்டிருக்கிறோம்' என்று சொல்கிறார்கள் நமது அமைச்சர்கள்!

"பத்து ஆண்டுகளாகப் பதவியில் இருந்தார்கள்; அப்போதும் ஏதேனும் கண்டுபிடிக்க மனம்வரவில்லை. 56 கடந்து 57 ஆகிறது—என்ன கிடைக்கிறது இந்தப் பூமியில் என்று கண்டுபிடிக்க முடிவு செய்திருக்கிறார்களாம்—அதுவும் தேர்தல் காலத்தில்! இது எதைக் காட்டுகிறது? நாட்டு மக்கள்மீது இந்த சர்க்கார் கொண்டிருக்கிற அக்கரையைக் காட்டுகிறதா, அல்லது அவர்களுக்கு வரப்போகிற ஆபத்தைக் காட்டுகிறதா?

★★★★★★★★★★★★★★★★★★

நாட்டின் நலிவு நீங்க
நாட்டவர் வாழ்வு பெற

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே
ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

பஞ்சசீலப் பண்டிதர்களுக்கு இது சகஜமாம்!

காங்கிரஸ் ஆட்சியில்

ஊழல்-ஊழல்-ஊழல்!

எங்கும் எதிலும்

ஊழல்!

★

தணிக்கையாளர் கணக்கிற்கு வந்தவை-
நம் கண்ணில் பட்டவை!

★

கோடிக்கணக்கான ரூபாய்-

ஏழையின் குருதி, வியர்வை,
உழைப்பு தந்த வரிப் பணம்

பாழ்! பாழ்! பாழ்!

★

1949-ல்	கம்பளம் வாங்கியதில் நஷ்டம்	ரூ. 1 லட்சத்து 34 ஆயிரம்
1950-ல்	ஜீப் கார்கள் வாங்கியதில் நஷ்டம்	ரூ. 1 இலட்சம்
1951-ல்	தற்காப்பு இலாக்காவில் ஒழுங்கீனம்	ரூ. 3 கோடியே 18 இலட்சம்
1953-ல்	தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தில் ஒழுங்கீனம்	ரூ. 2 கோடியே 83 இலட்சம்
1954-ல்	இரசாயன உரப் பேர ஊழல்	ரூ. 13 கோடி
,,	அரிசிக் கொள்முதல் விற்பனையில் நஷ்டம்	ரூ. 4 கோடியே 50 இலட்சம்
...	உபயோகிக்காத கட்டிடத்திற்கு 7 ஆண்டுகள் தபால் இலாகா வாடகையாகக் கொடுத்தது	ரூ. 4 இலட்சத்து 60 ஆயிரம்
...	புட்டிப்பால் வாங்கியதில் நஷ்டம்	ரூ. 5 கோடி
	பக்ரா நங்கல் திட்டத்தில் பெரிய அதிகாரிகள் மோசடி செய்தது (இன்னும் இந்த ஊழல் விசாரணையிலிருக்கிறது)	சுமார் ரூ. 15 கோடி

★

அடுக்கினால் பட்டியல் விரியும்!

★

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்!
காங்கிரசார் ஆட்சித் திறனுக்கு இவை நல்ல சான்றுகள்!

★

'ஊழல்கள் பெரிய நிர்வாகத்தில் சகஜம்'
என்றார் பண்டிதர்

★

இவர்கள்தான் ஆளத் தகுதி படைத்தவர்களாம்!

★

ஏழை எளியோரே! வாக்காளர் பெருமக்களே!

உழைப்பின் அருமை அறியா இந்த மமதையாளர்களுக்குப்

பாடம் புகட்ட!

★

தி. மு. கழக அபேட்சகர்களுக்கே

ஓட்டுத் தாருங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

டெல்லி ஆதிக்கம் அழிய
வடவர் சுரண்டல் ஒழிய

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே
ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

சுமத்ரா விடுதலை எழுச்சி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தோனேஷியாவில் இனி, மேற்கத்திய ஜனநாயகம் அமுல் செய்யப்பட முடியாது என்றும், எனவே ஒரு தேசீய கவுன்சில் நிறுவுவது என்றும், எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு சர்க்கார் அமைப்பது என்றும், இதுவே இந்தோனேஷியாவிற்கு உகந்த அரசியல் முறை என்றும் குடியரசுத் தலைவர் டாக்டர் சுகர்ணோ இப்போது கூறுகிறாராம்.

சுதந்திரம் பெற்று 11 ஆண்டுகளாகியும், இந்தோனேஷியாவில் ஒரு உறுதியான சர்க்கார் அமைவதற்கு வழி ஏற்படாது போய்விட்டது என்றும், மேற்கத்திய ஜனநாயகம், இந்தோனேஷிய மக்களுக்கு உகந்ததாயில்லை என்றும், அது இந்தோனேஷிய மக்களின் அபிலாஷைகளுக்கொத்த உண்மையான ஜனநாயகமாக இல்லை என்றும் வானொலியில் பேசிய சுகர்ணோ கூறியிருக்கிறாராம்.

கம்யூனிஸ்டு ஆதரவு

சுகர்ணோவின் இந்த புதிய திட்டத்திற்கு கம்யூனிஸ்டுகள் ஆதரவு தெரிவித்திருக்கின்றனராம்—ஒத்துழைப்பும் நல்குவதாகக் கூறியுள்ளனராம்.

இப்போதுள்ள ஆட்சி முறையில், கம்யூனிஸ்டுகள் இடம்பெறவில்லை.

'விடுதலை'க்கு மறுப்பு!

16—2—57 வெளியூர் 'விடுதலை' இதழில், 'நாகை திராவிட மருத்துவக் கழகத்தினர் கூட்டத்தில் காமராசரின் ஆதரவாளரான காங்கிரஸ் அபேட்சகரை ஆதரிப்பது என்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது'—என்று வெளிவந்துள்ள செய்தி தவறானதும் விஷமத்தனமானதுமாகும்.

"ஏனெனில், நாகையிலுள்ள முடி திருத்துவோர் கழகத்தின் நிர்வாகிகள் எவரையும் கலக்காமல், குறிப்பிட்ட சிலரை வைத்துக்கொண்டு, 'நாகை திராவிட மருத்துவர் கழகம்' என்ற பெயரில் புதிய அமைப்பை ஏற்படுத்தி எதேச்சாதிகாரமாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றார்கள். 'இந்த முடிவு எங்களைக் கட்டுப்படுத்தாது என்பதுடன், நாகை தொகுதியில் போட்டியிடும் தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரிப்பது' என்ற முடிவை நாகை முடிதிருத்துவோர் கழகம் நிறைவேற்றியிருக்கிறது.

எம். கே. பெருமாள்,
நாகப்பட்டினம்.

★★★★★★★★★★★★★★★★★★

தொழில்கள் பெருக
எல்லோரும் வேலை பெற

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே
ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

தேர்தல் கூட்டங்கள்

சென்னையில் :

25-2-57 மாலை 6-மணிக்கு சென்னை பெருமாள் கோயில் தெரு, தாண்டவராய பிள்ளைத் தெரு சந்திப்பில், பேசின் பிரிட்ஜ் தொகுதி அபேட்சகர் **என். வி. நடராசன்** அவர்களை ஆதரித்து, 16-வது வட்டத் தி. மு. கழகத் தேர்தல் குழுவின் சார்பில் தேர்தல் பொதுக்கூட்டம் தோழர் சி. ஏழுமலை தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், ஆர். எஸ். பாண்டியன் பேசுவர். மாஸ்டர் ஆர். கோவிந்தன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

நுங்கம்பாக்கம் :

25-2-57 மாலை 6-மணிக்கு சென்னை-நுங்கம்பாக்கம் இரயில் நிலயத்திற்கு அருகில் தோழர் எம். சுந்தரராசன் தலைமையில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, முகவை ஆர். எஸ். பாண்டியன், ஏ. எஸ். ஜேசுபாதம் ஆகியோர் பேசுவர்.

வண்ணை :

25-2-57 மாலை 6-மணிக்கு சென்னை-வண்ணை அலுமினியம் பாக்டரி தொழிலாளர்கள் சார்பில் தி. மு. கழக அபேட்சகர் தோழர் என். சீவரத்தினம் அவர்களை ஆதரித்துத் தேர்தல் பொதுக்கூட்டம் தோழர். டி பி. சுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், எஸ். முத்துகிருஷ்ணன், தோழியர் சத்தியவாணிமுத்து, சத்தியநாதன் ஆகியோர் பேசுவர்.

சேத்துப்பட்டு :

26-2-57 மாலை 6-மணிக்கு சென்னை-சேத்துப்பட்டு வ. உ. சி. இளைஞர் கழக மனையில் தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் தோழர் வே. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தி. வ. அதிகாயன், தி. சு. கிள்ளிவளவன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

இராயபுரம் :

26—2—57 இரவு 7 மணிக்கு சென்னை இராயபுரம் நாகாத்தா கோவில் தெருவில் தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் தோழர் எஸ். லாசர்ஸ் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. கே. வில்வம், என். சீவரத்தினம், தி. ந. மதிவாணன், அன்புரோசு, ஏ. கிருட்டினன், மு. ந. இளஞ்சேரன் ஆகியோர் பேசுவர்.

குறிப்பு:—கூட்டத்தில் தண்டையார்பேட்டை பர்மா ஷெல் தொழிலாளர்கள் தேர்தல் நிதி அளிப்பர்.

எழும்பூர் :

26—2—57 மாலை 5-30 மணியளவில் சென்னை—எழும்பூர் வீராசாமி பிள்ளை தெருவில் தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டம் தோழர் எஸ். வேதரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவர்.

மாம்பலம் :

27-2-57 மாலை 6.மணிக்கு சென்னை பழைய மாம்பலம் பரோடா தெரு அருகில் தோழர் சீனிவாசன் தலைமையில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அறிவழகன், பி. ஆர். கோகுலகிருஷ்ணன், ஏ. எஸ். ஜேசுபாதம் ஆகியோர் பேசுவர்.

பார்க் டவுன் :

27-2-57 இரவு 7-30 மணிக்கு சென்னை சென்ட்ரல் இரயில் நிலயம் அருகில் ஜேசன் தெருவில் 28.வது வட்ட தி. மு. கழக அனுதாபிகள் சார்பில் தேர்தல் பொதுக்கூட்டம் தோழர் என். ஸ்டீபன் பேர்னுண்டோ தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், பி. பாலசுப்பிரமணியம், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, க. அறிவழகன், தோழியர்கள் வெற்றிச்செல்வி அன்பழகன், அமுதா ஆகியோர் பேசுவர்.

சிங்காரத்தோட்டம் :

27-2-57 மாலை 6-மணிக்கு சென்னை-வண்ணை சிங்காரத் தோட்டத்தில், தோழர் என். சீவரத்தினம் அவர்களை ஆதரித்துத் தேர்தல் கூட்டம் தோழர் பி. ஏ. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பி. வி. முத்துசாமி, டி. ஜி. கிருஷ்ணசாமி, எஸ். நீலமேகம், தோழியர் சத்தியவாணிமுத்து, எம். சத்தியநாதன் ஆகியோர் பேசுவர்.

தேர்தல் ஊர்வலம்

சென்னை—இராயபுரம் :

27-2-57 பிற்பகல் 1-மணிக்கு சென்னை-இராயபுரம் பனைமரத் தொட்டி சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றத்திலிருந்து தி. மு. கழக அபேசகர் தோழர் என். **சீவரத்தினம்** அவர்களை ஆதரித்து ஓர் சைக்கிள் ஊர்வலம் குத்துச்சண்டை வீரர் திரு. கே. சுந்தரராஜு அவர்கள் தலைமையில் புறப்பட்டு 1, 2, 3, 4 வட்டங்களிலும் சுற்றி வண்ணை—சிங்காரத் தோட்டத்தில் நடைபெறும் கூட்டத்தில் முடிவுறும். கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் நிதி தாரீர்!

★

வரவு	ரூ.	அ.	பை
23—2—57 இதழ்ப்படி ...	58,168	8	1
கீழ்வாஞ்சூர் தி.மு.க. அனுதாபிகள், சிங்கப்பூர் ...	155	0	0
கீணனூர் தி. மு. க.—என். ஜி. கேசவன் மூலம்:...	5	0	0
எம். செல்லன், காலூர்-மதுரை ...	25	0	0
தூத்துக்குடி தி. மு. க., எப். ஏ. ஜோசப் மூலம்:...	24	14	0
கலைஞர் என். பி. எம். அப்துல் காதர் ஏர்வாடி-நெல்லை ...	10	0	0
என். பி. சின்னு, நீர்முள்ளிக்குட்டை-சேலம் ...	2	0	0
மலேயா-கம்பார் நகர் தோழர்கள்—இரா. வெள்ளைச்சாமி மூலம் ...	151	0	0
ஜெகவீரராஜேந்திரன், ஸ்ரீவைகுண்டம் திருநெல்வேலி ...	10	0	0
கே. ஜெக்கய்யன், மேலக்கூடலூர், மதுரை ...	13	8	0
கோவை-அலங்கியம் தி. மு. கழகம் ...	7	0	0
சித்தூர்-புதுப்பேட்டை நகரி தி. மு. கழகம் ...	30	4	0
மதுரை-மானூர் தி. மு. கழகம் —ஆ. தி. முகப்பித்தன் மூலம் : ...	25	0	0
துங்கபத்ரா ஆஸ்பெட்—எஸ். சந்துபாய் மூலம்:...	61	0	0
ஆண்டிப்பட்டி தி. மு. கழகம் —ஆர். காளியப்பன் மூலம் : ...	25	0	0
பொள்ளாச்சி-இரும்பாளையம் தி. மு. கழகம் —தி. நடராசன் மூலம் : ...	5	0	0
சிங்கப்பூர்-சாலான் சாயபு—ஓ. செங்கையா 'முரசொலி' மூலம் : ...	3	6	0
ஆயிங்குடி வள்ளுவர் மன்றம் —பொன்னம்பலனார் மூலம்: ...	14	0	0
சென்னை-புழல் இரட்டைமலை சீனிவாசன் நினைவு மன்றம் ...	25	0	0
இராமநாதபுரம்-கீழ்க்கரை—வி. நடராசன் மூலம் : ...	15	4	0
மணப்பாறை-எடயப்பட்டி தி. மு. கழகம் ...	5	0	0
பகீரதன், டாடாபுரம்-திண்டிவனம் ...	2	0	0
ஆமதாபாத் தி. மு. கழகம் ...	1,300	0	0
சென்னை-14 வட்டத் தி. மு. கழகம் —அன்பழகன் மூலம் : ...	101	0	0
சென்னை கொத்தவால்சாவடி வாழை இலை, வாழைப்பழம் வியாபாரிகள் —அன்பழகன் மூலம் : ...	101	12	0
காய்கறிகாரர்கள்—அன்பழகன் மூலம் : ...	4	0	0
சென்னை டி. ஏ. அமிர்பாஷா மளிகைக்கடை ...	25	0	0
திருச்சி மாவட்டம்.பெரம்பலூர்-மேலமாத்தூர் தி. மு. கழகம் ...	9	5	3
கோ. எஸ். இலக்குமணன்—மாங்காய்தோப்பு தொழிலாளர் சார்பாக அன்பழகன் மூலம் : ...	11	0	0
சிங்கப்பூர் வி. எஸ். இரத்தினம் ...	76	3	3

ஆக மொத்தம் ரூ. **60,411-0-7**

நிதி அனுப்பிவைக்க வேண்டிய முகவரி :—

பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்,
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13.

அண்ணா அறைகூவல்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்று சொல்லலாம். சேலத்தில் அவர் வக்கிலாக இருந்திருப்பாரானால் மாதம் 3,000-த்திற்குமேல் சம்பாதித்திருப்பார்; சத்தியமூர்த்தி அய்யங்காரைச் சொல்லலாம்; வரதராசுலு நாயுடுவைச் சொல்லலாம்;—மின்சாரக் கம்பெனிமூலம் இலாபம் சம்பாதித்திருப்பார். ஆனால் காமராசர் எதைவிட்டார்? அவருடைய 18-வது வயதுவரையில் அவருடைய ஊரிலேயே ஒரு பெட்டிக்கடை குமாஸ்தாவாக இருந்தார்! விட்டது பெட்டிக்கடை வேலை; கிடைத்தது முதல் மந்திரி வேலை. இது தியாகமா அல்லது யூகமா? இப்படி, தியாகி என்ற சொல்லின் பொருளை மாசுபடுத்தாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'வெளியே போகச்சொல்லு'

'உண்மையான தியாகிகளெல்லாம் பட்டினியால் வாடி வெளியே கூட்டம்போட்டு 'காப்பாற்றுங்கள்' என்று கதறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எப்போதாவது காமராசரைக் கண்டு தங்கள் குறைகளை எடுத்துச்சொல்லப்போனால், 'இவர்களுக்கு வேலையில்லையா? இவர்களெல்லாம் ஏன் கத்துகிறார்கள்? போகச்சொல்லு வெளியே' என்கிறார் காமராசர்.

உத்தமருக்கு அங்கே என்ன வேலை?

"தென் மாவட்டத்தை சேர்ந்த ஒரு காங்கிரஸ் தியாகி—தேவகோட்டையைச் சேர்ந்தவர் என நினைக்கிறேன்—அவரை யானை மீது அமர்த்தி ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள் அண்மையில்; காரணம் அவர் சிறையில் இருந்தபோது, போலீஸ்காரர்கள், அவரது உடம்பில் கரும்புள்ளி செம்புள்ளி குத்தினார்கள். அதனால்தான் அவர் சிறையை விட்டு வெளியே வரும்போது, யானை மீது அமர்த்தி ஊர்வலம் வந்திருக்கிறார்கள்.

"அந்தத் தியாகி ஒருமுறை காமராசரிடம் வந்தார். அவர் வந்தது தமக்காகக்கூட அல்ல; தம்முடைய ஊர்மக்கள் நன்மைக்காகக் காமராசரைப் பார்க்க வந்தார். அப்போது காமராசர் அவரை சரியாகப் பார்க்கக்கூட இல்லையாம். இப்படி உண்மையான தியாகிகளும் அவர்கள் தியாகங்களும் இந்தக் காங்கிரசாலும் சர்க்காராலும் அலட்சியப் படுத்தப்படும்போது, உண்மையான காங்கிரஸ் தொண்டர்களுக்கு அங்கே என்ன வேலை என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொண்டனை இழக்காதீர்

"எனவேதான், இந்தப் பேட்டையில் வசிக்கும் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன் — 'இருபது ஆண்டுகளாக உங்களுடன் இருந்து பணியாற்றிய உத்தம ஊழியனை—கொள்கையை விட்டுக் கொஞ்சமும் வழுவாத நல்ல தொண்டனை நீங்களெல்லாம் இழந்துவிடாதீர்கள் என்று; பார்ப்பன நண்பர்களையும் இப்படியேதான் கேட்டுக்கொள்கிறேம்.

பார்ப்பன மக்களுக்கு வேண்டுகோள்

"இன்றைய நிலையில், பார்ப்பனர், யாரை ஆதரிப்பது என்று தெரியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரசுக்கு ஓட்டுப் போடுவது என்று அவர்கள் நினைக்கும்போதே, 'அக்கிரகாரத்தையே கொளுத்தச் சொன்ன பெரியாரல்லவா இப்போது காங்கிரசில் இருக்கிறார்; எப்படி காங்கிரசுக்கு ஓட்டுப் போடுவது?' என்று திகைக்கிறார்கள். 'தி. மு. கழகத்தாருக்கு ஓட்டுப் போடலாம்,' என்று நினைத்தால் 'அவரிடமிருந்து வந்தவன்தானே அண்ணாதுரை' என்று நினைத்துக்கொள்கிறார்கள்!

"நாம், இதுவரையிலும் 'பார்ப்பனீயம்' என்ற தன்மையை கண்டிக்கிறோமே தவிர—அது கூடாது என்று வலியுறுத்துகிறோமே தவிர, 'பார்ப்பனர்' என்ற தனிப்பட்டோரைத் தாக்கியதே கிடையாது. நான் தி. மு. கழகத்தின் பொதுச்செயலாளராக இருந்தபோதே, பார்ப்பனரைத் தாக்கிப் பேசக்கூடாதென்று கழகத் தோழர்கள் அனைவருக்கும் தாக்கிது பிறப்பித்தேன். அதைப்போலவே தோழர்களும் அம்மாதிரி தாக்கிப் பேசியது கிடையாது.

"எனவே, தி.மு. கழகம் ஒரு சனநாயக ஸ்தாபனம். மக்கள் பணியையே தங்கள் தூயபணியாகக் கொண்ட தொண்டர் முகாம் தி. மு. கழகம். இது தான் மக்களுக்கும் நாட்டுக்கும் பயன்படுமே தவிர, கழகத்தின் மீது வீண் சந்தேகப்பட்டால் நாட்டில் நிச்சயம் சர்வாதிகாரம் தான் மிஞ்சும் என்று பார்ப்பன நண்பர்களுக்கும் கூற ஆசைப் படுகிறேன்.

"இந்தத் தொகுதியில் போட்டியிடும் நமது தோழர் நடராசன், சிறந்த பொதுநல ஊழியர். கட்சிக்கும் நாட்டுக்கும் நல்ல தொண்டர். எனவே அவரை இழந்துவிடாதீர்கள்! ஏழையின் கண்ணீரையும் பாட்டாளிகள், பாமரர்களின் பசியையும் பட்டினியையும், நடுத்தரக் குடும்பங்களின் அவல நிலையையும் அவர் அறிந்திருப்பவர்—அவரால் அறிய முடியும். ஆனால், அது டி. டி. கிருஷ்ணமாச்சாரி போன்றவருக்கு எப்படி தெரியும்? பசி என்றால் என்ன என்று அவருக்கென்ன தெரியும்? பசி என்றால், 'எனக்குப் பசி எடுக்கவில்லை' என்றுதான் அவர் சொல்வார்.

"எனவேதான், நான் மீண்டும் காங்கிரசாருக்குச் சொல்வேன்—'கட்சி என்று நினைத்துக் கொண்டு மீண்டும் இந்தத் தடவை காங்கிரசை நாடாள அனுப்புவீர்களேயானால் இன்னும் ஒரு ஐந்தாண்டுக் காலத்திற்குப் பெருத்த தொல்லைகளை அனுபவிக்கப் போகிறீர்கள்?' என்று.

"இறுதியாகக் கழகத் தோழர்களுக்கு நான் சொல்லிக் கொள்வதெல்லாம், நீங்கள் வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்து, நமது அபேட்சகர்களின் சின்னங்களைக் காட்டி அவை பற்றிய விளக்கங்களை எடுத்துரைத்து எப்படி ஓட்டுப் போடுவது என்பதை விளக்குங்கள் — உற்சாகம் காட்டுங்கள் என்பதுதான்."

அகில இந்தியாக்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்? யாராவது ஒரு ஆளைப் பார்த்தால், கந்தசாமி என்றால் கந்தசாமி என்று சொல்வோமே தவிர, 'கந்தசாமி காது, கந்தசாமி கண், கந்தசாமி கை, கந்தசாமி கால்—இவை அத்தனையும் படைத்த எல்லாக் கந்தசாமியே வா' என்று அழைக்கமாட்டோம்.

"அதைப்போல, இந்தியா என்பது ஒன்று என்றால்—இங்கிலாந்து ஒன்று என்ற காரணத்தால் இங்கிலாந்து; செர்மனி ஒன்று என்ற காரணத்தால் செர்மனி; பிரான்ஸ் ஒன்று என்ற காரணத்தால் பிரான்ஸ் — என்றிருப்பதைப் போல், 'இந்தியா' என்றுதானே இருக்கவேண்டும்? 'ஆல் இந்தியா' வானொலி—'அகில இந்தியா' என்று ஏன் சொல்லுகின்றார்கள்"?

—காஞ்சிக் கூட்டம் ஒன்றில்
அண்ணா

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.